| மூலம் | நிதியளித்தல் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | 2017 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்ட நிதிகள் | |
|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடிஏ | 63.64 | 9,553.78 | 700 | 0.52 | 80.00 |
| இலங்கை அரசாங்கம் | 0.59 | 88.57 | 20 | 0.01 | 1.40 |
| **மொத்தம்** | **64.23** | **9,642.35** | **720** | **0.53** | **81.40** |

செயற்திட்ட நோக்கங்களை அடைவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு செயற்திட்டக் காலப்பகுதி முழுவதையும் மேவுகை செய்து நிதி மற்றும் பௌதீக இலக்குகளை சுட்டிக்காட்டி தயாரிக்கப்படுவதற்கு வேண்டப்பட்டிருந்த விரிவான விபரமான செயல்நடவடிக்கைத் திட்டம் செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆகையால் செயற்திட்டத்தின் நிதித் திட்டங்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த மொத்த ஒதுக்கீட்டின் 15.70 சதவீதத்தை பிரதிநித்துவப்படுத்துகின்ற ஐ.அ.டொலர் 10 மில்லியன் தொகையான ஒதுக்கீட்டில் 0.80 சதவீதத்தை பிரதிநித்துவப்படுத்துகின்ற ஐ.அ.டொலர் 0.52 மில்லியன் தொகை மாத்திரம் மீளாய்வாண்டின் இறுதியில் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 720 மில்லியன் தொகையான ஒதுக்கீட்டில் 11.30 சதவீதத்தை பிரதிநித்துவப்படுத்துகின்ற ரூபா 81.40 மில்லியன் மாத்திரம் மீளாய்வாண்டின் இறுதியில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**3.2 பௌதீக செயன்முன்னேற்றம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம், விவசாயிகள் பயிற்சி மற்றும் இயலளவை கட்டியெழுப்புதல், நவீன வேளாண்மை தொழில்நுட்ப பூங்கா, உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் உட்கட்டமைப்பு மற்றும் பகுப்பாய்வு ரீதியான மற்றும் கொள்கை ஆலோசனை ஆதரவு ஆகிய பெயர்களையுடைய 04 உப கூறுகளை செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் கொண்டிருந்தன. பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், அடிப்படை அளவைகள் (baseline surveys) மற்றும் மதிப்பீட்டு முறைமைகள் என்பவற்றிற்கான ஆலோசனையாளர்களை பணிக்கமர்த்துதல் மற்றும் விவசாயிகள் அமைப்பு போன்றவற்றின் மதிப்பீடுகள் போன்ற உப கூறுகளின் கீழான ஆரம்ப நடவடிக்கைகள் மாத்திரம் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) செயற்திட்ட நிர்வாகக் கைநூலின் 34 ஆம் பந்தியின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 வரையிலும் வெளிநாட்டு ஆலோசனையாளரின் சேவைகளை சர்வதேச விவசாய தொழில்நுட்ப சேவை வழங்குநர்களாக தெரிவு செய்து பெற்றுக்கொள்வதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. செயற்திட்டத்தின் அனைத்து வடிவமைப்பு நடவடிக்கைகளும் அத்தகைய நடவடிக்கைகளின் ஆரம்பிப்பும் சேவை வழங்குநர்களினை தெரிவு செய்தல் மற்றும் செயலாற்றலில் தங்கியுள்ளது.

### 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

செயற்திட்ட நடவடிக்கைகள் 2017 சனவரியில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் பிரதிச் செயற்திட்டப் பணிப்பாளர், கணக்காளர்கள், பெறுகை உத்தியோகத்தர், கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள், சமூக அபிவிருத்தி நிபுணர்கள், பொறியியலாளர்கள் போன்ற முக்கிய பதவிகளிலுள்ள உத்தியோகத்தர்கள் 2017 யூலையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். இதன் விளைவாக, செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக ரீதியான செயன்முன்னேற்றம் மீளாய்வாண்டின் போது மெதுவான செயன்முன்னேற்றத்தை காட்டியிருந்தது.